Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Answers Key:

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. (c) சிற்றிலக்கியம்
2. (a) மூன்று, நூறு, பத்து, எட்டு
3. (b) தொண்ணூற்றாறு
4. (c) நாடகம்
5. (d) சோம்பல்
6. (b) கலிவெண்பா
7. (b) அழகு

5 Marks

8. **முன்னுரை**

தமிழையே தூதுப் பொருளாக்கியுள்ளது தமிழ்விடுதூது. தமிழின் இனிமை. இலக்கிய வளம், சுவை, அழகு, திறம், தகுதி ஆகியன இப்பாடலில் விரவிக் கிடக்கின்றன.

அமுதத்தமிழே

1. இனிக்கும் தெளிந்த அமுதமே! அமிழ்தினும் மேலான வீடுபேற்றைத் தரும் கனியே! இயல், இசை, நாடகம் என் முத்தமிழாய்ச் சிறந்து விளங்கும் என் தமிழே! அறிவால் உண்ணப்படும் தேனே!

வேண்டுகோள்

2. மதுரையில் கோயில் கொண்டிருக்கும் சொக்கநாதர் மேல் காதல் கொண்ட பெண்ணொருத்தி தன் காதலைக் கூறி வருமாறு தமிழ்மொழியைத் தூது விடுவதாக அமைந்தது தமிழ்விடுதூது.

சிந்தாமணியே

பாவின் திறம் அனைத்தும் பொருந்தி நின்று என்றுமே சிந்தாத மணியாய் இருக்கும் உன்னை சிந்து என்று அழைப்பது உன் பெருமைக்குத் தகுமோ? அவ்வாறு கூறிய நா இற்று விழும் அன்றோ?

தேவர்களை விட வானத்தில் வசிக்கும் முற்றும் உணர்ந்த தேவர்கள் கூட சத்துவம், இராசசம், தாமசம் என்னும் மூன்று குணங்களையே பெற்றுள்ளார்கள்.

ஆனால், தமிழானது பத்துக் குற்றங்கள் இல்லாமல் செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம் உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி என்னும் பத்துக்குணங்களைப் பெற்றுள்ளதால் உயர்ந்ததாகும்.

வண்ணத்தமிழ்

மனிதரால் உண்டாக்கப்பட்ட வண்ணங்கள் வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை என ஐந்திற்கு மேல் இல்லை. நீயோ புலவர்கள் கண்டடைந்த குறில், அகவல், தூங்கிசை வண்ணம் முதலாக நூறு வண்ணங்களைக் கொண்டுள்ளாய்.

சுவைமிகு தமிழ்

நாவின் மீது பொருந்தும் குறைபாடுடைய உணவின் சுவைகள் ஆறுக்கு மேல் இல்லை. நீயோ செவிகளுக்கு விருந்தளிக்கும் ஒன்பது சுவைகளைப் பெற்றுள்ளாய்.

அழகுமிகு தமிழ்

1. தமிழை அடையப் பெறாத மற்றையோர்க்கு அழியாத அழகு ஒன்றே ஒன்று அல்லாமல் அதிகம் உண்டோ? நீயோ நீங்காத அம்மை முதலிய அழகு எட்டினைப் பெற்றுள்ளாய் என தமிழை வாழ்த்துகிறார்.
2. மேற்கண்ட காரணங்களால் தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பது தெள்ளத் தெளிவாக விளங்குகிறது.

9. **முன்னுரை**

ஒருவர் எண்ணத்தை மற்றவர் தெரிந்து கொள்ளவும், தன்னுடைய சிந்தனையை மற்ற வர்களுக்கு எடுத்துக்கூறவும் உதவுவது மொழியாகும். நமது எண்ணங்களைத் தமிழ் மொழியின் மூலம் பிறருக்கு எடுத்துக் கூறும்போது அது பிறருக்கு எளிதாகப் புரிகின்றது.

முதன்மொழி

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தமொழியாக விளங்குவது தமிழ்மொழி. கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம் போன்ற திராவிட மொழிகளுக்குத் தாயாகவும் விளங்குவதால் பல்வேறு வேர்ச் சொற்களைக் கொண்டுள்ளது. பல்வேறு சொற்கள் பிறமொழி பேசுபவர்களும் எளிதில் புரிந்துகொள்ள இயலும்.

தாய்மொழி

தமிழ்மொழி எனக்குத் தாய்மொழியாக அமைவதால் என்னுடைய சிந்தனை. எண்ணம், ஏக்கம், தேவைகளைப் பிறரிடம் பகிர்ந்துக் கொள்ளத் தாய்மொழியாம் தமிழே முதலில் வரக் காண்கின்றேன். ஏனெனில் அவற்றைத் தெளிவாகவும் எளிதாகவும் பிறர் புரிந்துக் கொள்ளும் முறையிலும் தமிழ்மொழியைப் பயன்படுத்த என்னால் முடிகின்றது.

பிறமொழிகளைக் கற்பதில் தவறில்லை என்றாலும் எல்லாவற்றையும் பிறமொழிகளில் என்னால் எடுத்துக்கூற முடிவதில்லை. அவற்றிலுள்ள சொற்களின் கோர்வை சில சமயங்களில் எனக்குக் கிடைப்பதில்லை. ஆகவே நான் தாய் மொழியாம் தமிழல் பேசும் போதும் எழுதும்போதும் அத்தகைய குறைபாடுகள் ஏற்படுவதில்லை. பிறமொழிகளைக் கற்பதற்கும் தமிழ்மொழியே உறுதுணையாக அமைகின்றது.

10. காதொளிரும் குண்டலமும் கைக்கு வளையாபதியும் கருணை மார்பின் மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில் மேகலையும் சிலம்பார் இன்பப் போதொளிரும் திருவடியும் பொன்முடி சூளாமணியும் பொலியச் சூடி நீதியொளிர் செங்கோலாயத் திருக்குறளைத் தாங்குதமிழ் நீடுவாழ்க"

கவியோகி சுத்தானந்த பாரதியார் இப்பாடல் காட்டும் இலக்கியங்களின் பெயர்களை வரிசைப்படுத்துக.

1. குண்டலகேசி
2. வளையாபதி
3. சீவகசிந்தாமணி
4. மணிமேகலை
5. சிலப்பதிகாரம்

6. சூளாமணி
7. திருக்குறள்

11. 1. உருவகம்
2. சொல்வதைக் கேட்பாயாக
3. உவந்து + உரைக்கும்
4. உண்ணப். விண்ணப்பம்

3 Marks

12. வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு. காமம். அவலம், கோபம், நகை, சமநிலை ஆகியன ஒன்பான் சுவைகள் ஆகும்.
13. 1. வானத்தில் வசிக்கும் முற்றும் உணர்ந்த தேவர்கள் கூட சத்துவம், இராசதம். என்னும் மூன்று குணங்களையே பெற்றுள்ளார்கள்.
2. ஆனால் தமிழானது நீ பத்துக் குற்றங்கள் இல்லாமல் செறிவு, தெளிவு. இன்பம், ஒழுகிசை. உதாரம். உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி பத்துக் குணங்களைப் பெற்றுள்ளதால் உயர்ந்ததாகும்.

QB 365 Study Material
QUESTION BANK 365